# அகிலாண்ட நாயகி உலகாளும்

# அன்னை கண்ணூர்பட்டி

# ஸ்ரீபெரியாண்டவர் பாமாலை



பரிதிமதி

First Print: Nov 2004

## அணிந்துரை

**திரு. நா. கிருஷ்ணமூர்த்தி**
**Rtd.Assistant Director,**
**Department of Industries and Commerce,**
**Government of Tamilnadu**

டாக்டர். இரவிச்சந்திரனின் கானமழை இது. மக்கள் மனதில் தெய்வச் சிந்தனையைத் தூண்டும் சிறந்த பாமாலை இது என்பதில் ஐயமில்லை. பயன்தரும் பத்திப்பாடல்களைப படைப்பதில் வல்லவர் இவர்.

இதயத்தின் அடித்தளத்தில் பதைந்துள்ள அன்னை பெரியாண்டவரின் மீது இவர் கொண்டிருக்கும் பக்தி, அளவிலாத் தூய பக்திப்பாடல்களைப் படைக்க உறுதணையாக இருந்தது உண்மையிலும் உண்மை. எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் கண்ணூர்பட்டி** பெரியாண்டவர் அன்னையை குலதெய்வமாக வழிபட்டு வருகிறோம். அன்னையை நினைத்து நாங்கள் தொடங்கும் ஒவ்வொரு செயலும் எங்களுக்கு வெற்றியைத் தேடித் தந்தது என்பதை நாங்கள் கண்கூடாகக் கண்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எங்கள் குடும்பத்தின் வாரிசான டாக்டர் இரவிச்சந்திரன் எழுதிய பெரியாண்டவர் பாமாலை என்னும் நூல் எல்லோர் மனதிலும் பக்தியை வளர்க்கும் என்றும், இப்பாடல்களைப் படிப்பதால் வாழ்வில் துன்பங்கள் நீங்கி இன்பம் மலரும் என்றும், ஸ்ரீபெரியாண்டவர் அன்னையைத் துதிப்பவர்கள் வாழ்வில் நினைத்த காரியங்கள் ஒவ்வொன்றும் கைக்கூடி வளங்கள் பலப் பெறுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர். இரவிச்சந்திரன் இயற்கையிலேயே இசைஞானம் பெற்று விளங்குவதால், சந்த நயத்துடன் எளிய நடையில் இப்பாடல்களைப் படைத்திருக்கிறார். இப்பாடல்கள் அனைவரையும் படிக்கத் தூண்டி நல்வழிப்படுத்தி பக்தியை வெளிப்படுத்தும் என்பதை நான் நம்புகிறேன்.

இப்படிக்கு,
அன்பன்
**கிருட்டிணமூர்த்தி அய்யர்**
(இரவிச்சந்திரன் அவர்களின் பெரிய தந்தையார்)

****கண்ணூர்பட்டி கிராமம் சேலம் நாமக்கல் 7NH சாலையில், புதுச்சத்திரத்திற்கு கிழக்கே 3கிமீ தொலைவில் அமைந்திருக்கிறது.**

## மதிப்புரை

பக்திப் பாடல்களின் ஆரம்ப மின்னல் கோலங்கள்

**திரு. கி. இராமச்சந்திரன்**
**Addl.Superintendent of Police**
**Govt. of Tamilnadu**

டாக்டர். இரவிச்சந்திரன் என்னுடைய உடன்பிறவா சகோதரர். நாங்கள் இருவரும் சிறுவயது முதல் ஆடிப்பாடிக் களித்து, பள்ளிக்குச் சென்ற நாட்களைப் பசுமையான நாட்களாக எண்ணி மகிழ்ச்சியில் திளைக்கிறேன். கர்வத்தோடு நான் பெருமைப்பட்டு கூறுகிறேன். இவர் ஒரு சிறந்த பக்திப்பாடல்களை இயற்றும் கவிஞராக வருவார் என்று: ஏனெனில் இவர் பேசும் சொற்களைவிட இவர் பேனாவிலிருந்து கொட்டும் எழுத்துப் பூக்கள் என்னை மிகவும் கவர்ந்தது என்னமோ உண்மையிலும் உண்மை.

இவர் உள்ளத்தின் அடியில் பூட்டிவைத்திருக்கும் அன்னை பெரியாண்டவரின் தூய பக்தி இவரை ஸ்ரீபெரியாண்டவர் பாமாலை என்ற நூலை எழுதத் தூண்டியது என்பதில் ஐயமில்லை. டாக்டர் இரவிச்சந்திரன் ஸ்ரீபெரியாண்டவர் பாமாலை மழைக்கு ஆரம்ப இரவிச்சந்திரனின் எழுத்து விரல்கள் காலத்தை வென்று நித்தியத்திற்கும் பக்தியைத் தூண்டும் ஆலமரமாக நிமிர்ந்து வாழ என் அன்பு வாழ்த்துக்கள்.

என்றென்றும் அன்புடன்
**இராமச்சந்திரன்**
(இரவிச்சந்திரன் அவர்களின் பெரிய தந்தையார் மகன்)

## ஆசிரியர் அறிமுகம்

இந்த நூல்மாலையைப் புனைந்த ஆசிரியர் டாக்டர் இரவிச்சந்திரன் கதிரியக்க இயற்பியல் பேராசிரியராக பெங்களுூரில் பணிபுரிகிறார். இரவிச்சந்திரன் நாமக்கல் ஸ்ரீநாகசுப்பிரமணிய அய்யர் என்பவரின் பேரனும், ஸ்ரீஇராமமூர்த்தி அய்யர் (Rtd. Rly.Station Master SRly) அவர்களின் புத்திரனும் ஆவார். பரிதிமதி என்ற பெயரில் அரங்கநாதன் திருமணி மாலை என்ற கவிதைத் தொகுப்பைப் புனைந்து அளித்தவர். கண்ணூர்பட்டி பெரியாண்டவர் அன்னையை குலதெய்வமாகக் கொண்ட குடும்பங்களில் அனுதினமும் அன்னையை வணங்கி வேண்டுவதற்காக ஒரு எளிய தமிழ் பாடல்கள் தேவை என்பதை உணர்ந்து எழுதப்பட்ட நூல்மாலையே ஸ்ரீபெரியாண்டவர் பாமாலை என்ற சிறுபதிப்பாகும். இந்த பாடல்கள் அன்னை பெரியாண்டவரே இந்த ஆசிரியர் மூலம் அருளியதாக எடுத்துக் கொள்ள வேண்டும். மனதில் நினைத்தவுடன் அருள்வழங்கும் பெரியாண்டவரின் கருணையை நாம் கண்கூடாக தினசரி வாழ்க்கையில் காண்கிறோம். இந்த பாடல்கள் நம் பக்தியை அவளது பாதமலர்களில் சமர்ப்பிக்க உதவும் என்று பரிபூரணமாக நம்புகிறேன்.

இப்படிக்கு,

**இரா. இரவிச்சந்திரன்**

**முகவரி:**

Dr.R.Ravichandran
Professor & Head, Department of Radiation Physics,
Kidwai Memorial Institute of Oncology,
Hosur Road, Bangalore-560 029.

Presently working as:
Chief Medical Physicist,
National Oncology Center,
The Royal Hospital, Muscat, Oman

**Res**: F101, Ram Adithya Apartments,
19/6, Nagappa Street, Pipeline A Cross,
Malleswaram, Bangalore-560 003.
Email: **ravichandranrama@rediffmail.com**

## அகிலாண்ட நாயகி உலகாளும் அன்னை கண்ணூர்பட்டி ஸ்ரீபெரியாண்டவர் பாமாலை

ஓம் அக்னிஜ்வால கிரீட குண்டலதராம்
இரக்தாங்க பூஜோஸ் வலாம்
ஹஸ்தைஹி சூலகபால பாசடமரூன்
நித்யம் வஹந்தீம் ஷிவாம்
நித்ராலம்பி பதான்விதாம் கடீதடே
ச்வேதாம் பரலங்க்காருதாம்
நானா துக்க விமோசனீம் பயஹரீம்
அங்காளிகாம் ஆஸ்ரயே.

**லம்:** ப்ருத்வி யாத்மிகாயை கந்தம் ஸமர்ப்பயாமி!
**ஹம்:** ஆகாஸாத் மிகாயை புஷ்பம் ஸமர்ப்பயாமி!
**யம்:** வாய்வாத் மிகாயை தூபம் ஆக்ராபயாமி!
**ரம்:** வகன்யாத் மிகாயை தீபம் தரிஸயாமி!
**வம்:** அம்ருதாத் மிகாயை அம்ருதம் நிவேதயாமி!
**ஸம்:** ஸர்வாத் மிகாயை ஸரவோபசார பூஜாம் ஸமர்ப்பயாமி!

ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி அன்னை பராசக்தி உலகத்தில் இருக்கும் அனைத்து வடிவங்களிலும் பரிமளிக்கிறாள். யாதுமாகி நின்ற கருணை ஸ்வரூபம். இருகரம் நீட்டி அவளை யாசித்தால் வேண்டுவதையருளும் துர்க்கை தேவி. அவளுடைய கடைக்கண் பார்வைக்காக ஏங்கும் தேவர், அசுரர், மனிதர் கூட்டம். எல்லாம் வல்ல இறைவனின் இடப்பாகத்தில் இருக்கும் ஈஸ்வரி. உயர்வு தாழ்வு இன்றி அனைத்து உயிர்களையும் காத்து இரக்ஷிப்பவள். மாரியம்மனாக உலகுக்கு மழையைக் கொடுப்பவள். ஆயிரம் கரங்கள் படைத்த காளியாக துன்பத்தை அழிப்பவள். காவல் தெய்வமாக, வனசங்கரி துர்க்கையாக, குலதெய்வமாக, அரவணையில் சயனக் கோலத்தில், பெரியாண்டவராக கண்ணூர்பட்டியில் விளங்கும் இராஜேஸ்வரி அன்னை. ஏற்றத் தாழ்வுகள் வரும்போது துலாக்கோல் போல் சமநிலைப்படுத்தி அமைதி தரும் பெரியன்னையை நான் புகழாரம் சூட்டி, பணிந்து இந்த சில துதிப்பாக்களைக் கூறித் துதிக்கிறேன். எல்லாம் வல்ல அன்னை சக்தி என் சொல்லில் நின்று அருள் புரிவாள் என்பது உறுதி.

பரிதிமதி

1. அகிலாண்ட நாயகியே அன்பின் சோதி
புகழாரம் சூட்டிடவே அருள்புரி தாயே
குருவாகி நீ யிருந்து காத்திடுவாயே
உருவாகி நீவந்து பாட்டில் நிற்பாய்.

2. அன்னையே மாதண்ட நாயகி நீயே
அரவணையில் துயில்கொண்ட தேவி நீயே
கண்ணூர்புரி மேவி ஆட்சி கொண்டவளே
எண்திசையும் கோலோச்சும் துர்க்கை நீயே.

3. ஆதரவு தந்து நீ ஆதரிப்பாயே
சூதுவாது வினைகளை நீகளைந் திடுவாயே
பரிபூரண ஒளிதந்து வழியும் காட்டி
சரியான பாதையிலே அழைத்துச் செல்வாய்.

4. இச்செகத்து இன்பங்களை அளவாய்த் தந்து
மெச்சிடுவாய் புலன டக்க நெறிகளையே
கச்சிதமாய் உன்சேவை நானும் செய்தே
உச்சநிலை நன்றடைய அருள் செய்வாயே.

5. படமெடுக்கும் அரவமுகம் குடையே ஆகும்
விடம்பரவும் அரவி னுடல் மஞ்சமாகும்
தென்திசையில் சிரம் பதித்து விண்வரையில்
கண்விழித்து உலகாளும் துர்க்கை நீயே.

6. சூலியவள் இருபாதம் நோக்கி நின்று
மேலிருக்கும் இருநுதலில் கண் பதித்து
கமலம்என இருகரங்கள் கூப்பி நின்றால்
இமயம்என வருவினைகள் அகன் றிடுமே.

7. வனம்மேவும் தாயானாள் அகிலாண் டேஸ்வரி
மனம்எங்கும் நிறைந் திடுவாள் ராஜேஸ்வரி
குணக்குன்றே தலை மகளே யோகேஸ்வரி
மணம்பரப்பி விளங் கிடுவாள் லோகேஸ்வரி.

8. கண் ணோக்கில்ஆண்ட ஊர் கண்ணூர்பட்டி
பெண் தெய்வம் கோலோச்சும் கண்ணூர்பட்டி
தருமத் தின்தலை நகராம் கண்ணூர்பட்டி
கருமத் தைப்போ திக்கும் கண்ணூர்பட்டி.

9. சாந்தமென திருஷ்டி தரும் அருளன்னையை
சொந்தமென சுற்றோர்கள் தஞ்சம் புகவே
எந்நாளும் புகல் தருவாள் சோதியவளே
பல்லோரைப் புரந் தருளும் உமையவளே.

10. கொங்கு மண்ணில் அரசமர வனம்தனிலே
எங்கும் நிறைகுணம் உடைய ஈஸ்வரியாய்
மதுரைவீரன் பத்தினி யுடன் ஏவல்செய்ய
குதிரைபடை புடைசூழ அயர்ந்து இருப்பாய்.

11. சுண்டி (இ)ழுக்கும் சாந்தமென வசீகரமாய்
வண்டி னங்கள் பந்தமுடன் சிந்துபாட
சுற்றி வரும்பக்தர்கள் இறைஞ்சி நிற்க
பற்றி ருக்கும் பந்தங்களை நீக்கிடுவாயே.

12. கார்குழலை மேனியிலே படர விட்டு
மார்பினிலே கஞ்சுகையும் முத்தும் பட்டும்
சீர்பரவ திருக்கையில் பாசாங் குசமும்
நேர்சங்கும் சக்கரமும் சூடியி ருப்பாய்.

13. புரிந்திடுவாய் எப்பொழுதும் நின் லீலைகளை
அறிந்திடவே மாந்தர்களும் எஞ் ஞான்றும்
விதியளிக்கும் வரைமுறை கள்திண் ணமாக
மதியுடனே ஏற்றிடவே அருள் செய்வாயே.

14. காமேஸ்வரித் தாயே நீஉலகி னுக்கே
வீரேஸ்வரித் தாயே நீமாந்த ருக்கே
மாலினி சூலினி பைரவி மகாகாளி
ஞாலம் புகழும் புவனேசு வரித்தாயே.

15. இரவினிலே வலம் வந்துகாத் திடுவாள்
இரவியினைப் பணிசெய்ய வைத்திடுவாள்
மரபுகளைச் சரியாகப் போற்றிக் காத்து
சிறப்புகளைச் செவ்வனே அளித் திடுவாய்.

16. மாதா பிதா குரு தெய்வமவளே
மேதா வியான அன்புத் தெய்வமவளே
சிந்தை யிலேஎஞ் ஞான்றும் நின்றிருந்து
வழி நடத்தும் திரிசூலி தேவியவளே.

17. அவளன்றி ஓரணுவும் அசையாது என்று
அவளையே அனுதினமும் துதிபாடி மனம்
அவளுடைய பெருமை களைஎன் றென்றும்
கருத்திலிட்டு புகழ்ந்தால் ஏற்றம் தானே.

18. கூர்ந்து அறிய புத்திதனைத் தந்திடுவாய்
கூர்மை யான நடுநிலையைப் பரிந்திடுவாய்
மாந்தர்க்கு யாக்கையினால் பணி செய்ய
ஈந்திடுவாய் உன் னருளை எந்நாளுமே.

19. சாமுண்டி மஹாகாளி சண் டீஸ்வரி
சூல்உண்ட கோதை யர்க்கு இரக்ஷாம்பிகே
சிவனாரின் மெய் யினிலே சரிபாதியாகி
அரனாரின் மனம் மகிழ் மஹேஸ்வரி.

20. திருவேற் காட்டில் வாழும்கரு மாரியும்நீயே
திருவேர கத்தின் முருகன்அன் னையும்நீயே
திருக்கொல் லூர்மூக அம்பிகை யும்நீயே
திருக்கடையூர் அபிராமி உமையும் நீயே.

21. திருஅம்பலப் பாடிபத்ர காளியும் நீயே
திருக்கருகை நகர்கர்ப்ப இரக்ஷகையும் நீயே
திருக்காஞ்சி புரம்காமாட்சி அன்னையும் நீயே
திருக்காசி மாநகர் விசாலாட்சித் தாயே.

22. நவக்கிரகங் களும்நின்று பதமலர் பணியும்
புவனங்கள் அனைத்தும் நினதுஏவல் புரியும்
நான்குவேதங் களும்நினது இன்சொல் லாகும்
பெரியபாளை யம்வாழ் புனித தேவியே.

23. உலகாளும் புதுகைநகர் புவ னேஸ்வரி
ஊழ்நடனம் மத்தூர் சாமுண் டேஸ்வரி
வீராசனத்தில் ஆட்சி செய்யும் இராஜேஸ்வரி
பத்மாசனத்தில் தியானத் தில்சாரதை யன்னை.

24. திருத்தில்லை சிவகாம சுந்தரியும் நீயே
திருமயிலை கற்பக அம்பிகையும் நீயே
திருமதுரை கயல் விழிமீனாட்சி யாய்
திருவக்கரை வக்ரகாளி துர்க்கை நீயே.

25. திருவானைக் காவினிலே அகிலாண் டேஸ்வரி
திண்டுக்கல் எழில்புரியும் அபிராமி யன்னை
சமயபுரத்தில் அவள்அருள் மாரி யன்னை
மருவத்தூர் அன்னை பரமேஸ்வரி யவளே.

26. மாங்காடு சிற்றூரில் ஸ்ரீதுர்க்கை காட்சி
மீன்குளத்தி புரிதன்னில் மீனம்மை காட்சி
கொடுங்கல்லூர் கடற்கரையில் கடுந்தவம் செய்யும்
சோட்டாணிக்கரை மேவும் நாராயணி உமையே.

27. பெரியபாளை யத்தில்நீ சோதியாய் அமர்ந்தாய்
பன்னாரி மலைதீரம் மாதவத்தில் இருந்தாய்
எருமைமுக மகிடாசுரனை வதை செய்து
சாந்தமென சிங்க வாகனத்தில் சாமுண்டி.

28. படவேடு நதிதீரம் பரசுராம துர்க்கை
மடமாது உண்ணாமலை அண்ணாமலை நகரில்
சென்னை யம்பதியில் முப்பாத்த அம்மனாகி
கருமாரி யாய்நின்ற பெரியாண்டவ ரம்மா.

29. மட்டளவை வாழ்க்கையிலே உயர்த்திடுவா ளன்னை
பட்டமரம் தளிர்த்திடவே பட்டீசுவரம் துர்க்கை
மருவாகும் துன்பங்களை குருவாக அகற்ற
மருவத்தூரில் வீற்றிருக்கும் ஸ்ரீபவானி அன்னை.

30. ஸ்வர்ணமுக ஈஸ்வரி யாம்பெரி யாண்டவரே
பௌர்ணமி நிலவொளி யில்பரி மளிப்பவளே
சிருங்கேரி திருத்தலத் தில்சாரதை யன்னையே
திருவருளால் உலகனைத் தும்வளர்க் கின்றதேவியே.

31. இமயமலை சாரத்தில் வைஷ்ணவி தேவி
சமதளத்தில் உக்ரமான ஸ்ரீஜ்வாலாமுகி தேவி
முக்கடலும் சங்கமமாம் கன்னியா குமாரி
எக்கணமும் அருகிருக்கும் பெரியாண்ட அன்னை.

32. கிருஷ்ணாநதி தீரத்தில் பினாகினி துர்க்கை
காவிரிநதி தீரத்தில் செல்லாண்டி துர்க்கை
பவானிநதி தீரத்தில் ஸ்ரீபவானி துர்க்கை
கன்னிகா பரமேஸ்வரி யாம்பெரி யாண்டஅன்னை.

33. கருணைமொழி கண்ததும்பும் ஸ்ரீதுர்க்கை நீயே
அருணனது கிரணங்கள் தன்மேனி யெங்கும்
சருமமதில் ஒளிபொங்க தீபமாய் மின்ன
வருணனைகள் மிகவிளங்க அருள்புரி தாயே.

34. தகிக்கின்ற அக்னிநிற வேற்காட்டு அம்மா
சாந்தமென பரிமளிக்கும் மருவூர் ஈஸ்வரியே
சிந்தாமணி யெனவிளங்கும் பரிபூரண தேவி
பெரியாண்டவராக அருள்செய் வாய்மா தேவிநீயே.

35. படைக்கும் தொழில்விரிஞ்சி யின்சரஸ்வதி யும்நீயே
காக்கும் தொழில்நாரணன் இலக்குமி யும்நீயே
அழிக்கும் தொழில்ஹரனாரின் பார்வதி யும்நீயே
பெரியாண் டவராகவிளங்கும் காமாட்சித் தாயே.

36. எப்பொழுதும் சத்தியமே யுன்அறை கூவல்அம்மா
முப்பொழுதும் காட்சிகொடு பக்தர்க் குநீயே
நானுன்னை மறந்தாலும் எப்போதும் நீயே
பலமாகி என்னுடனே கூடவே இருப்பாய்.

37. குலதெய்வம் எங்களுக்குக் கண்ணூரின் கண்ணே
சிலையாக நீயிருந்து சந்ததிகளைக் காப்பாய்
கைப்பற்றினேன் உனது திருவடியை நானே
களிப்பாக யென்குடும்பம் காப்பாற்று தாயே.

38. அன்பாக அணைத்தி டுவாள்தாயே காமாட்சி
அருளொடு பொருளனைத்தும் தருவாள் ஸ்ரீபவானி
புன்னைவன மருங்கில் தஞ்சை மாரியன்னை
பங்காரு காமாட்சி அவளே பெரியன்னை.

39. சின்னஞ்சிறு பெண்ணாக கயல்விழி மீனாட்சி
மன்னவரின் மகளானாள் அகிலாண்ட ஈஸ்வரி
திரும்பும் திசைதோறும் ஸ்ரீதுர்க்கை நடனம்
கரும்பும் பாசாங்குசமும் அருளன்னை சின்னம்.

40. திரிபுர சுந்தரியாம் சீர்காழித் தலத்தில்
அபிராம சுந்தரியாம் கடையூர்மா தலத்தில்
மகாலக்குமித் தாயாகத் திருமும்பை பதியில்
ரெங்கநாயகி யாய்நின்ற பெரியாண்ட அன்னை.

41. சுஹாஸினி மருவூரில் குருவான அன்னை
திருமேருஎன விளங்கும் காஞ்சி காமாட்சி
ஸ்ரீசக்ர மத்தியினில் மாங்காடு தனிலே
ஸ்ரீலட்சுமி யாய்விளங்கும் பெரியாண்ட அன்னை.

42. அன்னபூர் ணேஸ்வரியாம் அகிலாண்டத் தாயே
என்னுடனே மனைவாழும் ஹொரநாட்டு தேவி
ஸ்வர்ணமுக கிரீடம் பூக்களின் ஹாரம்
பௌர்ணமி நிலவாகும் உன்முகமே யாகும்.

43. மருவூரில் வாழ்கின்ற மேலான தேவி
பரிவான குணத்தினாள் வேண்டுவ தளிப்பாள்
காமாட்சி மீனாட்சி அபிராமி துர்க்கை
கோலாட்சி நடத்திடும் பெரியாண்ட அன்னை.

44. கற்பூர நாயகியாம் ஸ்ரீதேவி நீயே
அர்ப்பணித்த மெய்யதனில் எப்போதும் வாசம்
அரிதாரம் பூசிகுங்கு மத்தைச் சாத்தி
பரிகாரம் தேடுகிறோம் அழுக்கெல்லாம் அகல.

45. ஓம்காளியாய் இருந்து நீயுலகத்தைக் காப்பாய்
ஓம்காரரூபமாய் நீவேள்வி யினையைப் புரிவாய்
திங்கள் மதிசூடிக் கபாலங்கள் புனைந்து
எங்கள் இல்லங்களையே நீமேன்மேலும் காப்பாய்.

46. சிறுவாச்சூர் தனிலே மதுரமா னகாளி
பொள்ளாச்சி தனிலே அவள்மாசா ணிகாளி
நார்த்தாமலை தனிலே அவள்முத்து மாரிகாளி
மத்தூர்புரம் தனிலே அவள்சாமுண் டிகாளி.

47. உருவங்கள் பலவானாள் பெரியாண்ட அன்னை
கருமங்கள் அனைத்திற்கும் அவளேயாம் மூலம்
செந்தூர வண்ணத்தில் மெய்யான தோற்றம்
மந்தார மலரானாள் எளியார்க்கு அன்பாய்.

48. துதிப்போர்க்குத் தாயாவாள் பெரியாண்ட அன்னை
மதிப்போர்க்குத் துணையாதரவு எல்லாம் அவளே
இன்பங்கள் துன்பங்கள் சரிசமமாய்க் கருதி
அன்பர்கள் நெஞ்சில் சீர்தூக்கி நிற்பாள்.

49. சூடாமணியாய்ப் பரிமளிக்கும் பெரியாண்ட அன்னை
வாடாமலர் மலர் மாலைசூடி யிருப்பாள்
கப்பரையில் குங்குமமும் செந்தூரம் தாங்கி
செப்பரிய அதிசயங்கள் என்குடியில் செய்வாய்.

50. உள்ளத்தில் எப்போதும் உறைவாய் நீயே
செல்வங்கள் மேன்மேலும் அருள்வாய் நீயே
பேரின்ப வாழ்க்கைதனை அருளித் தந்து
பெருமையுடன் மன்பதையில் வாழச் செய்வாய்.

51. நின்றுகொண்டு புவியாளும் புவனேசுவரித் தாயே
நின்றுகொண்டு புரந்தளிக்கும் அன்னபூர ணேஸ்வரி
நின்றுகொண்டு பார்புரக்கும் தசமகா காளி
நின்றுகொண்டு மஹாலட்சுமி யாய்ஆஸ்தி யளிப்பாய்.

52. கிடந்திருந்து நீதிதேவதை யாய்ப்பரி மளிப்பவளே
கிடந்திருந்து அடியவர்கள் சுற்றம் காப்பவளே
கிடந்திருந்து எல்லோர்க்கும் அருள் செய்யும்நீயே
கிடந்திருந்து மன்பதை யாளும்பெரி யாண்டவரே.

53. தண்ணளியாம் நீர்மல்கும் செவ்வரி யுடனே
கண்ணொளி பரப்பி ஞாலமெல்லாம் காத்து
களிப்புடனே திருவடியை இல்லங்களில் பதித்து
மலிந்திருக்கும் செல்வங்கள் அனைத்தையும் தருவாய்.

54. நான்என்னும் செருக்கையும் அகந்தையையும் நீக்கி
எனதுஎன்னும் அகங்காரப் பீடையும் நீக்கி
புவிதனில் எல்லோருக்கும் தாசனாகி விளங்கி
செவிதனில் நல்லவற்றைத் தெரிந்துகொள்ள அருள்வாய்.

55. படைப்பதனால் நீயேஎப் போதும்ஆதி லட்சுமி
தனமெல்லாம் நிரப்பி டுவாள்தன லட்சுமி
உணவளிப்பாள் எப்போதும் தான்ய லட்சுமி
சமைப்பதனால் நீயே சந்தான லட்சுமி.

56. பயம்போக்கிக் காத்திடுவாள் தைர்ய லட்சுமி
பலம்கொடுத்து வீறுதருவாள் வீர லட்சுமி
ஜயம்கொடுத்துத் தலைவனாக்கும் விஜய லட்சுமி
புவனம்எல்லாம் வலம்வருவாள் கஜ லட்சுமி.

57. அஷ்டலட்சுமி யின்ஒரே ஸ்வரூபம் பெரியாண்டஅன்னை
இஷ்டதெய்வம் அவளே எந்நாளும் காப்பு
கண்ணூரில் எழில் மங்கை விசுவரூபம்
கண்கொள்ளாக் காட்சியை எல்லோரும் பாரீர்.

58. பூர்ணகும்பம் கங்கைநீரில் பிரதிஷ்டை செய்து
ஸ்வர்ணமுக வடிவாக மனதிலே வைத்து
தலைகுனிந்து வணங்கிடவே பேரருள் செய்யும்
வனதுர்கை மாகாளி பெரியாண்ட அன்னை.

59. கண்டங்கி பட்டாடை சரிகையுடன் ஜொலிப்பாள்
பெண்தெய்வம் எனவிளங்கி திரிசூலம் தரிப்பாள்
மென்மலராம் பாதங்கள் சிலம்புடன் விளங்க
கண்ணூர்த் திருவூரில் பெரியாண்ட அன்னை.

60. இகச்சுகங்களில் எல்லாம்அவள் ஊடுருவி நிற்பாள்
பரம்பொருள் அனைத்தும் அளிக்கின்ற அன்னை
பொய்யான மெய்யையே மெய்யாக நம்பும்
சுயநல ஆசைகளைத் தகர்ந்தெடுத் திடுவாள்.

61. பல்லுலக லனைத்திலும் அவளேமெய் தெய்வம்
இவ்வுலகத் தவர்க்கு அவ்வுலகில் நாட்டம்
பகலவன் கிரணங்கள னைத்தும்அவள் கரங்கள்
மழைமாரித் துளிகள்அவள் கருணையின் அலைகள்.

62. அன்னையின் செவிநாசி வைரங்கள் கதிர்கள்
சூரியசந் திரனின் சுடரொளிக் கதிராகும்
மழைமேகக் கொண்டல்கள் அவள்பார்வை தனிலே
குழைமாதர் பணிந்தேத்தும் நீர்த்துளி களாகும்.

63. வென்றிடுவாள் எல்லோரின் கர்வங்கள் அனைத்தும்
சென்றிடுவாள் பக்தர்கள் குறியீடு இலக்கில்
மன்றாடிஅவள் தன்னில் விண்ணப்பம் செய்தால்
குன்றாகமன் பதையில் வாழ்ந்திடவே செய்வாள்.

64. பெரியம்மை யென்றுபல் லோரும்அஞ் சியதால்
பெரியாண்ட வர்என்று பாரோர்பெய ரிட்ட
கண்ணூர் புரிதன்னில் கடவுளாய் வாழும்
பெண்தெய் வம்எங்கள் குலதெய்வம் அம்மா.

65. வையம்எல்லாம் புகழ்பரப் பும்பெரியாண்ட அன்னையின்
பையரவுபஞ் சணையாம் பக்தர்களின் இறைஞ்சல்
எப்பொழுதும் தென்றலும் மென்காற்றும் வருடும்
முப்பொழுதும் கண்ணயர்ந்து சராசரம் புரப்பாள்.

66. முல்லைவன அரசமர நீழலில் துயில்கோலம்
சில்வண்டு பச்சைக்கிளிக் கூட்டம் எல்லாம்
ரீங்கார இசையோங்கித் தாலாட்டுப் பாடி
வேங்குழல் பண்பாட அரசாளும் தோற்றம்.

67. குயில்பாட செம்பூத்துப் புள்ளாட மருங்கில்
மயில்ஆட அரவங்கள் படமெடுத்து ஆட
மான்கூட்டம் ஓடோடித் தெம்மாங்கு பாட
தேன்ஈக்கள் ஒய்யாரம் பாடிடவே துயில்வாள்.

68. நின்றிருந்து தவம்இருக்கும் கன்னியா குமாரிதேவி
குந்தியிருந்து அருளளிப்பாள் கடிலுஸ்ரீ துர்க்கை
வீராசனத்தில் ஸ்ரீமேருதனிலே ஸ்ரீபுவ னேஸ்வரி
சவாசனமாய் அரவணையில் பெரியாண்ட அன்னை.

69. ஆயிரம்கோடி உடுக்களை மாலை யாக்கி
ஆயிரம்கோடி தேவர்களும் சேவை செய்யும்
நூபுரகங்கை தேவியைக் கூந்தலில் தரித்துக்
கோபுரகலசத் தில்இரவி யின்சக்தியை ஈர்த்திடுவாய்.

70. மாற்றம்சிறிது மில்லாத நல்லுள்ளம் தந்து
ஏற்றம்மிகு வாழ்க்கையை நீஅமைத்திடு வாயம்மா
தோற்றம்எப் பொழுதும்உன் பெருமைக்கு சாட்சி
கொற்றம்தனை சீராக நடத்திடு வாயம்மா.

71. நாமகிரித் தாயார் நாமக்கல் மாநகரத்திலே
யோக ஆஞ்சநேயர் நின்ற கோலத்திலே
லட்சுமி நரசிம்மர் இளைப்பாறும் நிலையிலே
கண்ணூர் புரியில்ஸ்ரீ பெரியாண்டவர் சயனநிலையிலே.

72. பரங்குன்றில் தவம்செய்யும் முருகனின் அன்னை
வானோர்க்கும் மேலோர்க்கும் தலைமையாம் அவளே
அருளளிக்கும் அன்னையைக் காணயாவரும் வாரீர்
களிப்பாகும் பெரியாண்டவரை மனதிலே துதித்தால்.

73. கற்பனைக் கெட்டாத கைவண்ணம் கொண்டவளே
முற்பிறவி வினைகளை நற்பயனாகத் தருபவளே
பரிவுடன் சுற்றத்தைக் கனிவுடன் அருள்செய்து
தெளிவான எண்ணங்களை மென்மேலும் அருள்வாய்.

74. கனிவான குணக்குன்றே அன்னையே பராசக்தி
முனிவோரும் பணிவோரும் எந்நாளும் துதித்து
பந்தங்கள் சொந்தங்கள் தனிலிருந்து விடுத்து
குந்தகங்கள் வாராத சென்மத்தை யளிப்பாய்.

75. மருவூரில் வாழ்கின்ற ஸ்ரீதுர்க்கை நீயே
கருவூரில் பசுபதியின் உமையவளும் நீயே
உச்சயினி காளியாய்ப் பிரணவத்தை யருளிய
எச்சங்கள் இல்லாத முத்தால அம்மனே.

76. ஏழுநிற வானவில்லே தங்க ஒட்டியாணம்
ஏழுஏழு உலகங்கள் அவளின் மனோராஜ்ஜியம்
எட்டுத் திக்கெங்கும் அவள்பரி பாலனபெருமை
மட்டில்லா மகழ்ச்சியைத் தரும் பெரியாண்டவரே.

77. தாமரைமலர் தண்ணிதழில் சயனக் கோலம்
தாமரைமலரே இலக்குமியின் சிம்மாசன மாகும்
திருமகளின் மங்கலக் கோலத்தில் அயர்ந்திருக்கும்
திருவேற்காடு மாரியம்மை பெரியாண்ட அன்னை.

78. கானகத்தில் வேள்வி செய்யும் ஸ்ரீதுர்க்கையம்மா
வேனல்மிகு கண்ணூர்புரி தெய்வமான தாயே
உக்கிரமான மெய்த்தோற்றம் அகற்றிக் கொண்டருளி
சொக்கநாயகித் தாயாக விளங்கும் பெரியன்னை.

79. வேணுகானம் எப்பொழுதும் கேட்டவண்ண மிருக்கும்
தூண்களென இருமருங்கும் மரங்கள்சூழ்ந் திருக்கும்
தேவர்கள் புடைசூழ ஓயிலாக உறங்கி
மாந்தர்கள் மனைவாழ எப்பொழுதும் அருள்வாய்.

80. எல்லையில்லா ஆசைகள் மேன்மேலும் துன்பங்கள்
தொல்லைதரும் அழுக்காறு கசடுறும் உலோபம்
இவையாவும் களைந்திட்ட சுகவாழ்க்கை வாழ
கவின்மிகும் பெரியாண்டவர் அருளை வேண்டுவோம்.

81. ஒவ்வொரு நாளிலும் உன்பெருமையைப் பாடியே
ஒவ்வொரு நாழியிலும் உயிர்மூச்சுடன் கலந்து
உன்னையே நொடிப்பொழுதும் நான்மறந் திடாமல்
உன்னுடைய திருவடியாம் தோணியைப் பற்றினேன்.

82. பசுமரத்தில் ஈரமாகி விறகினில் நெருப்பாகி
பாற்கடல் அமுதமாகி வெண்ணெயில் நெய்யாகி
வேய்ங்குழல் இசையாகி வீணையின் நாதமாகி
மெய்யில் உயிராக மறைந்திருக்கும் பெரியன்னை.

83. கற்பக விளக்காவாள் கண்ணூர்புரி பெரியன்னை
பொற்பினில் விளங்குவாள் அணையாத சோதியில்
கொற்கைக் கடற்கரையின் வெண்முத்து மாலையுடன்
அற்புத தாண்டவத்தில் ஆனந்தஎழில் நடனம்.

84. நீலமயில் தோகையிலே ஆயிரம் கண்ணானாள்
நீலோற்பல மலர்களில் ஆயிரம் வண்ணமானாள்
நீலவானம் தனிலே ஆயிரம் உடுக்களானாள்
நீலவண்ண அரங்கனின் ஆயிரம் கரங்களானாள்.

85. மங்காத பெருமையுடன் மன்பதையில் வாழும்
சிங்காத னத்தில்வீற்றி ருக்கும் ஆதிபராசக்தி
சிங்கமுக வாகனத்தில் பவனிவரும் அன்னை
எங்கள்குலம் தழைக்கவைக்கும் பெரியாண்ட அன்னை.

86. தோற்றம் மறைவில்லாத சிரஞ்சீவி தெய்வம்
மாற்றம் தன்னைவிளை விக்கும்மேலான தெய்வம்
வனதுர்க்கை யாய்உறங்கு கின்றபெரியம்மை தெய்வம்
குணக்குன்றே அருட்கடலே எங்கள்குல தெய்வம்.

87. பரிமளிக்கும் எழில் மேனி படுத்துறங்கும்
சிரித்தமுகம் மீன்விழிகள் அழகிய வதனம்
மென்பட்டின் சேலைகளைக் கைதொழுது போர்த்த
எஞ்ஞான்றும் சந்ததி களைக்காத் தருள்வாய்.

88. பகைவரையே அழித்திடும் சதுர்புஜ கரங்களும்
வகையான மூர்த்திகளாம் மாறுபட்ட உருவமும்
சிந்தனையில் எந்நாளும் நிலைத்திடும் வடிவமும்
வந்தனங்கள் பலசெய்து உந்தனையே பணிவேனே.

89. பணிவடக்கம் எந்நாளும் என்னுடனே விளங்க
மணிவிளக்காய்க் கொல்லூரில் அருள்புரியும் தாயே
சிந்தூர வண்ணத்தினாள் ஜ்வலிக்கும் விழியினாள்
மந்தார மலராக மென்மையுடன் காப்பாய்.

90. நீதியினைக் காப்பாற்றக் கண்ணகியாய் வந்தாய்
அறத்தினைக் காப்பாற்ற ஆதிரையாய் உதித்தாய்
கடுந்தவம் புரிந்துகொண்டு கன்னியா குமரியில்
கொடுப்பாள் எல்லோர்க்கும் பரிபூரண வாழ்க்கையே.

91. அன்பே வடிவானாள் அன்னை பராசக்தியவள்
பண்பே குடிகொண்ட மெய்யன்பு தேவதையாம்
மட்டில்லா மகிழ்ச்சியையே அன்பர்க்கு வழங்கும்
சுடர்மேனி மங்கையவள் பெரியாண்ட வரம்மா.

92. ஓம்கார ரூபத்தினாள் அருள்மேவும் சிந்தையவள்
ஓம்கார வடிவமே வேதங்களின் நாதமாகும்
ஹ்ரீங்காரம் அன்பு பணிவான பண்புடன்
ஸ்ரீசக்தியான உமை யவளும் அவளேயாகும்.

93. மட்டற்ற மகிழ்ச்சியினை எந்நாளும் தருவாள்
கட்டில்லா துன்பங்கள் அனைத்தையும் அறுப்பாள்
வேரோடு நின்று சிந்தையிலே மேவி
பாரோர்க்கு எப்பொழுதும் மேலான தேவி.

94. ஏகாந்த நிலையினிலே உறங்குகின்ற தேவி
மாகாளியாய் விளங்கிக் காக்கின்ற தேவி
நாள்தோறும் அவளைநாம் வணங்குகின்ற பேறு
கோள்களின் தீண்டுதலைப் போக்கிடும் மாற்று.

95. காளிதாசன் நாவினிலே திரிசூலத்தில் எழுதிய
உச்சயினி மாகாளி அருவமாம் தோற்றம்
ஒட்டக்கூத்தர் பெருமை பாரோரின் அருமை
மட்டில்லா உயர்ச்சி கூத்தனூர் சரஸ்வதியே.

96. பர்வதராசன் மகளான பார்வதித் தாயானாள்
தட்சனின் கர்வபங்கத் தாட்சாயினி யானாள்
இறையவரின் இடபாக ஆதிசக்தி யானாள்
சங்கத்தமிழ் முழங்கும் மதுரையம்பதி மீனாட்சிதேவி.

97. பரிமளகந் தங்களுடன் சந்தனத்தில் அலங்கரித்து
மரிக்கொழுந் துமாலையுடன் வெண்முல்லை மலர்சாத்தி
குழைந்தெடுத்த மென்புனுகும் சவ்வாதும் மெய்யிலிட்டு
தொழுதேத்த அன்னையவள் மனம்குளிரும் தானே.

98. எங்கெங்கு நோக்கினும் சக்தியன்னை உருவம்
பொங்கிவரும் உவகையுடன் அருளன்னையைத் தொழவே
நவக்கிரக ஆளுகைகளின் தன்மையினைக் குறைத்து
புவிதனில் மேன்மேலும் ஏற்றம்கொடுப்பாள் தானே.

100. திருவரங்கம் தனிலேஅரங்கன் பள்ளி கொண்டான்
சுருட்டப்பள்ளி தனிலேஅரனும் பள்ளி கொண்டான்
கண்ணூர்பட்டி தனிலேஆதிசக்தி பள்ளி கொண்டாள்
பள்ளிகொண்ட தெய்வங்கள் சக்திபீடங்க ளம்மா.

101. அரசமர நீழலில் அரசுபுரியும் சக்தி
முரசமர நீழலில் வாழ்கின்ற சக்தி
வேற்காட்டு அன்னையின் சொரூபமான சக்தி
பார்போற்றும் பெரியாண்டவரே சோதியான சக்தி.

102. சந்திர மவுலியாம் சாந்தமான முகத்தோற்றம்
குந்தகங் கள்வந்தால் விலக்கிடும் வகைசுபாவம்
எந்தமாற் றங்கள்வரினும் ஸ்திரமான குணபாவம்
எங்கள்குல தெய்வமாம் சாம்பவி பெரியன்னை.

103. சித்தியிலே ஞானசக்தி தந்திடுவாள் அன்னை
புத்தியிலே எந்நாளும் உறைந்திருக்கும் தெய்வம்
குற்றமில்லா சிந்தையுள்ளம் மேன்மேலும் பெருக
உற்றதுணை யாயிருப்பாள் பெரியாண்ட அன்னை.

104. மந்திர வடிவமாம் அவள்மேனி லாவண்யம்
சுந்தர ரூபமாம்எங்கள் குலதெய்வ அன்னை
புந்தியில் எந்நாளும் அவள்சிந்தை படர்ந்திட
மாதவம் செய்திட வேண்டுமே நரனே.

105. சின்னஞ்சிறு பெண்ணாக அகிலாண்ட ஈஸ்வரி
தென்குமரிக் கரையோரம் தவம்செய்யும் குமரி
அபிராமியாக திருக்கடவூர் கடல் மருங்கில்
மாதவம் செய்யும் புவனேஸ்வரி அன்னை.

106. முத்தமிழில் அன்பாக சிந்தையினில் நினைத்து
சித்தமதில் பண்வடிவில் நன்றாக அமைத்து
உத்தமமாம் மாலையென மென்சுவையில் புனைந்தால்
அத்தருணம் அன்னையவள் கண்ணருகே இருப்பாள்.

107. எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள் உருவம்
பொங்கும் ஆஸ்திகள் அனைத்தையும் தருவாள்
மங்காத சோதியாம் பெரியாண்டவ ரன்னையை
எங்கள் சிந்தைநினைத் தவுடன்ஓடியே வருவாள்.

108. ஆதிசக்தி நீயே பண்புடைய குருவானவளே
சோதிகாட்டி சுற்றங்களை வழிகாட்டிச் செல்வாய்
பந்தங்களை விரட்டிடவே உன்னடி பணிவோம்
தசமகா காளியாய் எஞ்ஞான்றும் வருவாய்.

109. திங்கள் மதிசூடி செந்தூர வண்ணத்துடன்
எங்களுடைய குடிதன்னில் எப்போதும் நின்று
மங்காத புகழ்விளங்கி எக்காலமும் வாழ
பொங்கு மவள்அருளைக் குன்றாமல் தருவாள்.

110. இடுக்கண்கள் பலவாகி எதிர்தோன்றி வந்தாலும்
செறுக்குடனே அவையெல்லாம் முன்னோக்கித் தடுத்து
மிடுக்காக மென்மேலும் எதிர்நீச்சல் கொள்ள
மறுபிறவி நீக்கிடும் பெரியன்னை அருள்வேண்டும்.

111. மாணிக்க மணியாரம் தன்மெய்யில் தரித்து
வைரங்கள் முத்துடனே கஞ்சுகைகளும் புனைந்து
மென்பாதம் சிலம்புடன் ஒய்யாரமாய் விளங்க
சுந்தரமாய்த் துயில்கொள்ளும் திருமேனி யழகாம்.

112. பஞ்சபூதங்கள் எந்நாளும் அளவுடனே யியங்க
பஞ்சபாதகங்கள் செய்பவர்கள் வலுவிழுந்துவீழ
வெஞ்சினத்தில் செவ்விழிகள் கொப்பளித்து நிற்கும்
மஞ்சளெனும் மங்கலமாம் வலிவான தோற்றம்.

113. மந்தனெனும் சுந்தரனின் தண்டனையைக் குறைத்து
சொந்தமென எப்பொழுதும் கொண்டாடும் விதமாய்
அருள்மிகுந்த கருணைமுகம் பார்போற்றும் வடிவாம்
மருள்நீக்கும் பெரியாண்டவர் எங்கள்அன்னை யம்மா.

114. சிற்சபையில் ஒயிலாக நடனமிடும் சபேசன்
அர்த்தமெய்யில் அழகான பெண்ணுருவம் கொண்ட
உருவகிக்க இயலாத முகஸ்வரூபம் விளங்கும்
உருவத்தாள் எங்கள் பெரியாண்டவர் அன்னை.

115. சுட்டிடுவாள் நான்என்னும் அகந்தையினை அடைந்தால்
பட்டாடையுடனே அயர்ந்திருக்கும் பரிபூரண தேவி
அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும்
மங்கல மாம்மனைவிளங்க அருள்கின்ற அன்னை.

116. சூல்தோன்றி வளர்த்திடும் கொடுமையான சக்திகளை
வேல்கொண்டு சம்ஹரிக்கும் தசமகா காளியாய்
பெரியன்னை அருள்வேண்டி யாசித்து இருக்கும்
மறுபிறவி வேண்டாத குலமகனை ஆதரிப்பாய்.

117. கல்தோன்றி மண்தோன்றிய பழமைக் காலத்தில்
புல்லினுக்கும் ஓரறிவுஇல்லா உயிர்கட்கும் ஆதரவாய்ப்
பாங்கான தேவதையாய்ப் பரிமளித்த பெருமை
பெரியாண்டவரான தெய்வமாம் உன்னையே சாரும்.

118. பண்பான குணக்குன்றே பரிவான தேவி
அன்பான மொழிகளுடன் ஆதரிப்பாய் தாயே
என்பான மெய்யுடனே எப்பொழுதும் உன்னை
வாசம்மிகு மலர்களால் அருச்சிக்க அருள்வாய்.

119. சுணங்கிய முகம்இன்றி பக்தர்களைக் காக்க
இணங்கிய மனத்துடன் எப்பொழுதும் வருவாள்
வணங்கியே உனைநானும் எந்நாளும் துதிக்க
குணக்குன்றாய் அருளி ஆதரிப்பாய் தாயே.

120. பொறுப்புடனே அலுவல்களைத் திண்ணமாய் அணுகி
மறுப்பில்லா மனம்தன்னை எனக்கருள வேண்டும்
சோதியாய் இல்லத்தில் எப்பொழுதும் வாழும்
மாதேவி நீயே பெரியாண்டவராம் தேவி.

121. பங்களிப்பாய் நன்மைகளை எஞ்ஞான்றும் எனக்கு
தங்குகுணம் ஈஸ்வரனின் கடுமையான பிடியில்
பாரோர்கள் மன்பதையில் துன்பப்படும் போதில்
சோர்வான உணர்ச்சி வாராமல் காத்தருள்வாய்.

122. செப்பரிய அற்புதங்களை நடத்திடும் பரமேஸ்வரியே
முப்புரிநூல் முதியவர் வேண்டுகின்ற உமையவளே
கண்ணூர்புரித் தலத்தில் அயர்ந்திருக்கும் மலைமகளே
மண்ணாளும் தேவர்களும் வணங்கிடும் தேவியவளே.

123. அருள்புரியும் தேவி பெரியாண்டவர் அம்மா
கருணைபுரி மூர்த்தி காருண்ய மூர்த்தி
அன்பாக அரவணைக்கும் தச மகாகாளி
கண்ணூர் புரியன்னை கமலாம் பிகையவளே.

124. குங்குலியம் போட்டுத் தசாங்கத் தூபமிட்டு
மங்கலமாய்ப் பூசையிட்டு அபிஷேகம் செய்தால்
குங்குமமும் சூடிமாங் கல்யம் அணிந்து
சுமங்கலியாய்ப் பரிமளித்து வரமெல்லாம் அருள்வாள்.

125. எங்கெங்கு நோக்கினும் அவள் திருவருட்பார்வை
பாங்காகப் பரிமளிக்கும் அன்பான உருவம்
செயல்ஒன்று வழிவேறு எனஎன்னும் தருணம்
ஒயிலாக எனக்கு நீவழிகாட் டிடுவாய்.

126. வணங்கிய கைகளுக்குள் அன்னைசக்தி உருவம்
பணங்களும் சகலபாக் கியங்களும் அளிப்பவள்
செயல்ஒன்று வழிவேறுஎன எண்ணும் தருணம்
அணங்காக மனத்தினுள் ஆதரிப்பாள் பராசக்தியே.

127. பாதங்களின் மென்சிலம்பும் விரல்களின் மோதிரங்களும்
வேதங்களின் நாதமாம் ஒலிகளை எழுப்பிடும்
மென்கழுத்து தனில்மரகதமும் வெண்முத்தும் பூண்டு
இன்னாளில் தெய்வமாக வாழ்கின்ற பெரியன்னை.

128. மேன்மை பொங்கும் சீலமான உருவத்தினாளவளே
கேண்மை மிகும்திரிசூலம் கையில்தரித் தவளே
நுண்மை யறிவினாள் அன்புஸ்வ ரூபத்தினாள்
பண்பாக வழிநடத்தும் அன்னைபவானித் தாயாவாள்.

129. சிங்கமுக வாகனத்தில் வலம்வருவாள் ஸ்ரீபவானி
எங்கள்குலம் பெயர்விளங்க எந்நாளும் காப்பாள்
மங்காத பெருமைபாரோர் ஏத்தும் அருமை
சாமுண்டி துர்க்கையின் காப்பாற்றும் அருளே.

130. அன்னபூரணித் தாயேநீ சகலசெல்வம் தருவாய்
விசாலாட்சித் தாயேநீ மனவிசாலம் தருவாய்
காமாட்சித் தாயேநீ சீர்எல்லாம் தருவாய்
பெரியாண்ட வர்நீயே சகலபெருமையும் தருவாய்.

131. பட்டின்மென் மெத்தையாம் அரவென்னும் பஞ்சணை
மட்டில்லா புகழாரம் மலர்களின் சரங்கள்
சந்திரமௌலி யாகதுயில் கொண்ட முகத்துடன்
இந்திரதனுசு தனைதிருக் கரத்தில் தரித்தவளே.

132. மருவத்தூரிலே விளங்கு கின்ற ஸ்ரீதுர்க்கைதேவி
உருவத்தில் சௌந்தர்யமாம் சூடாமணி யவளே
திருவேற்காட் டில்கருமாரி யாம்அபிராமி அன்னை
பெரியாண்ட வராய்அருள் செய்யகண்ணூரில் வந்தாள்.

133. மாணிக்க மணியாரம் கழுத்திலே அணிந்தாள்
தூணென்று ஆதரவாய்ப் பக்தர்களுக்கு நிற்பாள்
பொற்சுட்டி தனையே நெற்றியிலே அணிந்து
கற்போர்க்கு அருள்வாள் கலைவாணி உருவாய்.

134. செலுவான வளேதிரி புரசுந்தரியாம் பெரியன்னை
வலுவான மனத்தையே எந்நாளும் தருபவள்
மங்காத புகழ்பரப்பி தெளிவான குணத்துடன்
கங்குபகல் அனைத்திலும் ஆதரவாய் இருப்பாள்.

135. வித்தைகளெல்லாம் அளித்திடுவாள் ஆரண்ய துர்க்கை
சித்திகளைச் செய்திடுவாள் காளிகை துர்க்கை
பிந்துஸ்தானம் தனிலேதிரு மேருவில் நிற்கும்
எங்கள்குல தெய்வம் பெரியாண்ட அன்னை.

136. வாராகி பைரவி தசபுஜமகா காளியாய்
மாறாத அன்பாகும் அருள்தரும் கரங்களுடன்
அட்ட புஜங்கள் அனைத்திலும் ஆயுதங்களுடன்
கெட்ட சக்திகளை விரட்டிடுவாள் விஜயதுர்க்கைதேவி.

137. திருக் கொல்லூர் மூகவடிவான அம்பிகையே
திருவக்கரையில் குழந்தையை செவியில் அணிந்தவளே
திருமத்தூர் புரியில் கோரமான ரூபத்தினளாய்
திருமணஞ்சேரி உமையவள் எங்கள் பெரியன்னை.

138. சங்குசக்ரம் திரிசூலம் வெற்றிவேல் இவைகளுடன்
சதுர்புஜ கரங்களாம் பார்போற்றும் உருவம்
திரிநயன சுந்தரியாம் எங்கள் பெரியன்னையிடம்
மறுபிறவி யில்லாத அருளதனை வேண்டுவோம்.

138. மேன்மேலும் உருக்கினால் பொன்னுக்குப் பெருமை
மேன்மேலும் உருகியே வணங்கினால் பக்தியாகும்
மேன்மேலும் அன்னையை அணுகியே பணிந்தால்
மேன்மேலும் உயர்த்திடுவாள் மனைபெருமை தானே.

139. அநுபூதி நிலையதனை அளித்திடுவாள் அன்னை
அநுபூதி நிலையே ஆத்துமாவின் ஆனந்தம்
அநுபூதி நிலையதனில் விண்ணப்பம் செய்தால்
அநுபூதி நிலையாக அவளிடம் ஐக்யமுக்தி.

140. செல்லுமிட மெல்லாம் செல்வதனால் செல்வம்
செலுவாக விளங்கு வதால்சீர்மிக்க செல்வம்
செல்வத்தி னால்பெரியன் னையைச்செல்வ மாக்கினால்
செல்வத்தை மனைதனிலே செலுத்திடுவாள் அவளே.

141. மனைதேவியாக எப்பொழுதும் விளங்கிடும் பெரியன்னை
மனுநீதிதனையே மாந்தர்க்குப் புகட்டிடும் பெரியன்னை
மேன்மேலும் நன்மைகளை அளித்திடும் பெரியன்னை
தேனாண்டாள் தேவியாக காத்திடும் பெரியன்னை.

142. குலம்காக்கத் தெய்வமாக அயர்ந்திருப்பாள் அன்னை
நலம்போற்றி நாள்தோறும் அருள்செய்யும் அன்னை
அன்புவழி மாறுபட்டால் சினம்கொள்ளும் அன்னை
தன்மையாக அடிவருடக் கொற்றம்காக்கும் அன்னை.

143. சலங்கைஒலி அனுதினமும் சன்னமாய்க் கேட்கும்
நலுங்கஉடல் எந்நாளும் ஊர்பவனி சுற்றும்
தவறுகள்எங்கு நடந்தாலும் உடனாகக் கவனம்
சுவரெல்லாம் மாந்தர்க்கு அவளிடும் வரைமுறையே.

144. கற்பூர நாயகியே செல்லி யம்மா
கருணை புரி ஆசீர்வதி ஈஸ்வரியே
குலமகனின் நல்வாழ்வை நீ யருள
பலவிதமாய்ப் போற்றி நின்றேன் அருள்வாய்நீயே.

**லம்** : பிருத்வியாத் மிகாயை கந்தம் ஸமர்ப்பயாமி
**ஹம்** : ஆகாஸாத் மிகாயை புஷ்பம் ஸமர்ப்பயாமி
**யம்** : வாய்வாத் மிகாயை தூபம் ஆக்ராபயாமி
**ரம்** : வகன்யாத் மிகாயை தீபம் தர்ஸயாமி
**வம்** : அம்ருதாத் மிகாயை அம்ருதம் நிவேதயாமி
**ஸம்** : ஸர்வாத் மிகாயை ஸர்வோபசார பூஜாம் ஸமர்ப்பயாமி.

உனது திருவடியை எப்பொழுதும் மனதில் வைத்து பரிபூரணமாக உனது அருளை யாசித்து நிற்கும் அன்பர்களை உன் கடைக்கண் பார்வையினால் காப்பாற்ற வேண்டுகிறேன். ஸ்ரீசக்ர மத்தியினில் மேருவின் உச்சியிலே ஆயிரம் நாமங்களுடன் ஸ்ரீலலிதா பரமேஸ்வரியாக உலகம் காக்கின்ற அன்னையே, நீ எங்கள் பொருட்டு கண்ணூர்புரி சிற்றூரில் அரவணையில் துயில் செய்து புவனம் எல்லாம் ஆட்சி செய்து காக்கின்ற பெருமையை இந்த நூல் மாலையின் மூலம் புனைந்திருக்கிறேன். நீ அருளுடன் ஏற்றுக் கொண்டு ஆசீர்வதிப்பாய் என வேண்டிக் கொள்ளும் பரிதிமதியாகிய இரவிச்சந்திரன் என்னும் அன்புமகன்.

**ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.**

பரிதிமதி.